# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 89/மா/2022**

**நாள்: 26.07.2022**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் - 02,
மதுரை மாநகராட்சி,
மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 14.06.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.06.2022–ல் பெறப்பட்டு 89/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 14.06.2022 நாளிட்ட தனது மனுவில் :

"நான் கடந்த 15.5.2021–ஆம் தேதியில் மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு இணையம் வழியாக கோரிக்கை மனு அனுப்பி இருந்தேன். அம்மனுவில் பழைய வார்டு 23, புதிய வார்டு 1, மதுரை மாநகராட்சி புது விளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெருவில் மின்விளக்கு கேட்டு இருந்தேன். அதன்படி என் மனுவினை மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகத்திலிருந்து மதுரை மாநகராட்சி ஆணையருக்கு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது. எனது மனுவினை மாநகராட்சி ஆணையர் அவர்களால் ஏற்றுகொள்ளப்பட்டு நடவடிக்கை எடுப்பதாக இணையம் வழியாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்று வரையிலும் எனக்கு கடிதம் மூலம் தகவல் தெரிவிக்கவில்லை. ஏற்கனவே, மின்கம்பம் இருந்தும், இதுநாள் வரையிலும் மின் விளக்கு பொருத்தவில்லை. மின் விளக்கு தற்போது

விலை ரூ.400 முதல் 500 வரையாகும். எங்கள் பகுதியான அய்யப்பன் தெருவில், அடிப்படை வசதியான தெரு விளக்கு பொருத்தாமல், ஒரு வருட காலமாக அலட்சியமாக இருந்துவரும் மதுரை மாநகராட்சி ஆணையர் மற்றும் தற்போது புதிய வார்டு 1 புதிய மண்டலம் 2 (வடக்கு) குதிரை பந்தைய திடல், K.புதூர், மதுரை-2, உதவி ஆணையர் அவர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அவர்களின் உயர் அதிகாரி அவர்களுக்கு பரிந்துரை செய்யுமாறு மாண்புமிகு தமிழக உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 12.07.2022அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.07.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. மனுதாரர் 12.07.2022 அன்று தூத்துக்குடி முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

> "மதுரை மாநகராட்சி, புதுவிளாங்குடி பழைய வார்டு எண்.23, தற்போது புதிய வார்டு எண்.1, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெருவில், மின் விளக்கு கேட்டு மாவட்ட ஆட்சியருக்கு புகார் மனு கொடுத்திருந்தேன். மேற்கண்ட தெருவில் மின்கம்பம் இருந்தும் சுமார் 500 ரூபாய் மதிப்புள்ள பல்ப் இன்றுவரை போடப்படவில்லை. எனவே, மேற்கண்ட இடத்தில் மின் விளக்குகளை பொருத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

4. மதுரை மாநகராட்சி வடக்கு மண்டல உதவிப் பொறியாளர் 12.07.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

> "மனுதாரர் மேற்கண்ட மின் விளக்கு அமைப்பது தொடர்பாக மாநகராட்சியில் எவ்வித புகாரையும் அளிக்கவில்லை. மனுதாரர் தெரிவித்துள்ள தெருவில் நேரடியாக ஆய்வு செய்து அங்குள்ள மின் கம்பத்தில் பல்ப் பொருத்திட ஓரிரு நாட்களில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:

- மனுதாரர் தான் வசிக்கும் அய்யப்பன் தெருவில் மின் விளக்குகள் கடந்த ஒரு வருட காலமாக பொருத்தப்படாமல் உள்ளதாகவும், இது சம்மந்தமாக மாவட்ட ஆட்சியருக்கு இணையம் வழியாக புகார் அனுப்பியும், மாநகராட்சி ஆணையரிடமிருந்து, மனு பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்து, கடந்த ஒரு வருட காலமாக எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்காத அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் மின் விளக்குகளை பொருத்தவும் தனது மனுவில் கோரியுள்ளார்.
- மதுரை மாநகராட்சி, வடக்கு மண்டல உதவிப்பொறியாளர் தனது வாக்குமூலத்தில் மனுதாரர் மேற்கண்ட மின் விளக்கு அமைப்பது தொடர்பாக மாநகராட்சியில் எவ்வித புகாரையும் அளிக்கவில்லை என தெரிவித்துள்ளார். 15.05.2021 அன்று மனுதாரரால் மாவட்ட ஆட்சியர் இணையம் வழியாக புகார் அளிக்கப்பட்டு, 28.07.2021 அன்று ஆணையரால் மனு பரிசீலிக்கப்பட்டு, தெருவிளக்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என

தெரிவிக்கப்பட்ட நிலையில், உதவி பொறியாளர் தனது வாக்குமூலத்தில், மனுதாரரால் மின்விளக்கு அமைப்பது தொடர்பாக எவ்வித புகாரையும் அளிக்கவில்லை என தெரிவித்திருப்பது உதவிப் பொறியாளரின் அலட்சியப்போக்கையும், பணியில் அவருக்கு இருக்கும் அக்கறையின்மையையும் காட்டுவதாகவே இம்முறைமன்றம் கருதுகிறது.

- அரசு, மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பல்வேறு நலத்திட்டங்களை முன் எடுத்து செய்து வருகின்ற நிலையில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் இதுபோன்று சாதாரண அடிப்படை வசதிகள் தொடர்பான கோரிக்கைகளை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் உடனுக்குடன் நிறைவேற்றினால்தான் அரசுக்கும் மற்றும் மாநகராட்சிக்கும் நற்பெயர் கிட்டும் என்பதை அலுவலர்கள் உணர்ந்து தங்கள் கடமையை செவ்வனே ஆற்றிட வேண்டும்.

6. மேலும் தெரு விளக்குகள் அமைப்பது குறித்து Madurai City Municipal Corporation Act, 1971 ன் பிரிவு 206ல் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>Lighting</u>

> 206. Provision for lighting public street etc. - The Commissioner shall take measures for lighting in a suitable manner the public streets and public markets and all places of public resort vested in the Corporation by electricity, gas, oil or such other illuminant as the council may determine.

7. மேற்சொன்ன சட்டபிரிவின்படி பொதுமக்களின் அடிப்படை தேவையான தெருவிளக்கு வசதியை மாநகராட்சி அலுவலர்கள் செய்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செயல்படாமல் பொதுமக்களின் அடிப்படை வசதியான தெரு விளக்கு வசதியை பெறுவதற்குக்கூட அவர்களை அலைகழிக்கும் சம்பந்தப்பட்ட மதுரை மாநகராட்சி அலுவலர்களின் இச்செயலை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கின்றது. இவ்வாறு மெத்தனமாக செயல்பட்ட சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள மதுரை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

8. மதுரை மாநகராட்சி, வடக்கு மண்டல உதவிப்பொறியாளர் தனது வாக்குமூலத்தில், நேரடியாக ஆய்வு செய்து அங்குள்ள மின்கம்பத்தில் பல்ப் பொருத்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளவாறு, மனுதாரர் புகார் தெரிவித்துள்ள தெருவில் நேரடியாக ஆய்வு செய்து அங்குள்ள மின்கம்பத்தில் மின் விளக்குகள் பொருத்திட விரைந்து உரிய நடவடிக்கை எடுத்திட மதுரை மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

9. மேலும் பொதுமக்களிடமிருந்து அடிப்படை வசதிகள் கோரி பெறப்படும் இதுபோன்ற மனுக்களின் மீது சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உடனுக்குடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகளை வழங்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

The negligence and indifference of the local field officials especially the Assistant Engineers concerned are censured. Replacing the fused lights is a routine responsibility of the Corporation functionaries. This betrays lack of devotion to duty on the part of the staff in position in the area. Charges should be framed against the delinquents concerned and severe punishments should be imposed to curb this sort

of lethargy, inefficiency, arrogance . and defiance besides lack of accountability. The fused bulb or light should be replaced forthwith by the Corporation field officials. The Corporation Commissioner, Madurai is directed to ensure compliance with the directions of the Forum. The DMA is instructed to oversee the same with strict instructions to avoid such complaints by public that will eventually lead to negative response to the Government that is striving its best to serve the common people of the State.

It is a sad reflection on the utterly vacuum state of duty consciousness of the field officials. Still tragic that a petitioner has been forced to petition this Forum for a street light.

2022-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 26-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
மனை எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை – 18.
2. ஆணையாளர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.
4. உதவி ஆணையர்,
மண்டலம் - 02,
மதுரை மாநகராட்சி,
மதுரை.
5. இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

26/7/22
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032